# 15

# அனுமதி பெறல்

மற்றவர்களுக்குச் சொந்தமான வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற இடங்களுக்குள் நாம் செல்ல வேண்டுமானால், முதலில் அவர்களிடம் அனுமதி பெறல் வேண்டும். அதற்காகச் சில இடங்களில் வாசல் மணி பொருத்தப்பட்டிருக்கும். அவர்கள் தமது இடங்களில் சுதந்திரமாக இருப்பார்கள். ஆதலால் மற்றவர்கள் அவர்களிடம் பிரவேசிப்பதற்கு அனுமதி பெறுவது அவசியமாகும். அவ்வாறு அனுமதி கிடைத்து விட்டால் அங்கு செல்வதற்குத் தடை இல்லை. அவ்வாறன்றி அனுமதி மறுக்கப்படுமாக இருந்தால், உள்ளே செல்லாமல் திரும்பிவிட வேண்டும்.

அனுமதி பெறுவது எவ்வாறு? என்பதை இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. அதனை அறிந்து கடைப்பிடித்து வாழ வேண்டியது அவசியமாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் பிறர் இல்லங்களுக்குள் நுழைவதற்கு அனுமதி பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

'இறைவிசுவாசிகளே! உங்களுடையதல்லாத வீடுகளில் நீங்கள் (நுழையக் கருதினால்) அதில் இருப்பவர்களுக்கு ஸலாம் கூறி (அவர்களுடைய) அனுமதியைப் பெறாதவரையில் நுழையாதீர்கள்'. (24:27)

### அனுமதி பெறுவதற்கான ஒழுங்குகள்...

#### 1. பிறர் இல்லத்தினுள் நுழைய முன் ஸலாம் கூறவேண்டும்

ஒரு நபித்தோழர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டினுள் செல்வதற்காக 'உள்ளே நுழையலாமா?' என்று அனுமதி கேட்டார். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஊழியரிடம், 'நீர் சென்று அனுமதி கோரும் முறையை அவருக்கு கற்பிப்பீராக'

என்று கூறினார்கள். அவர் ‘அஸ்ஸலாமு அலைக்கும் உள்ளே வரலாமா? எனக் கேட்பீராக’ என்று கற்றுக் கொடுத்தார். (அபூ தாவூத்)

## 2. மூன்று தடவைகள் மாத்திரம் அனுமதி கோருதல்

‘அனுமதி கோருதல் என்பது மூன்று தடவைகள்தான். அனுமதி கிடைத்தால் உள்ளே செல்வீராக. இல்லை என்றால் திரும்பி விடுவீராக’ (புகாரி முஸ்லிம்)

பிறர் வீட்டுக்குச் சென்றால் வாசல் மணியை அழுத்தியோ, கதவில் தட்டியோ தான் வந்திருப்பதை உணர்த்த வேண்டும். பின்னர், வீட்டார் வாசலுக்கு வந்தால் ஸலாம் கூறி அனுமதி பெறல் வேண்டும். அவர்கள் அனுமதி வழங்கினால் மாத்திரமே உள்ளே செல்ல வேண்டும். அனுமதி கிடைக்காவிட்டால் உள்ளே செல்லக்கூடாது. வாசல்மணியை அழுத்து வதையோ, கதவில் தட்டுவதையோ மூன்று முறைக்கு மேல் செய்யக்கூடாது.

பிறருடைய வீடு அல்லது அலுவலகம் போன்ற இடங்களில் எவரும் இல்லா விட்டால் அல்லது அனுமதி கிடைக்கா விட்டால் அல்லது திரும்பி விடுங்கள் என்று கூறப்பட்டால் திரும்பி விட வேண்டும்.



## 3. வீட்டுக்குள் உற்றுப் பார்க்காதிருத்தல்

'அனுமதி கோருவது மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே தவறான பார்வையிலிருந்து தவிர்ப்பதற்காக பிறரின் இல்லதிற்குச் செல்பவர் அனுமதி கோருவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தம் பார்வையை அவ்வீட்டினுள் செலுத்திப் பார்க்கக் கூடாது'. (புகாரி, முஸ்லிம்)

பிறருக்கு சொந்தமான இடங்களினுள் கதவு வழியாகவோ, யன்னல் வழியாகவோ பார்வையைச் செலுத்தி உற்றுப் பார்ப்பது பெரும் தவறாகும். தமது சொந்த வீட்டில் உள்ள மற்றவர்களின் அறைகளுக்குச் செல்வ தாயினும்கூட அவர்களிடம் அனுமதி கோர வேண்டியது அவசியமாகும்.

'உங்கள் குழந்தைகள் பருவமடைந்து விடும் பட்சத்தில் அவர்களும் தங்களுக்கு வயதில் மூத்தவர்கள் அனுமதி கோர வேண்டியதன் பிரகாரம் அனுமதி கோர வேண்டும்'. (24:59)

'ஒருவர் தன்னுடைய பிள்ளைகள், தாய், சகோதரர், சகோதரி, தந்தை ஆகியோரின் வீடுகளுக்குள் நுழைவதற்கும் அனுமதி பெற்றுச் செல்வது அவசியமாகும்'. (அல் - அதபுல் முப்ரத்)

எமது வீட்டினுள் நுழையும் போதும் ஸலாம் கூறவேண்டும் என்பதற்கு பின்வரும் குர்ஆன் வசனம் சான்றாக அமைகிறது.

'நீங்கள் எந்த வீட்டில் நுழைந்தபோதிலும் அல்லாஹ்வால் உங்களுக்கு கற்பிக்கப்பட்ட மிக்க பாக்கியமுள்ள பரிசுத்தமான (அஸ்ஸலாமு அலைக்கும்) எனும் வாக்கியத்தை நீங்கள் உங்களுக்குள் கூறிக்கொள்ளவும்' (24:61)

ஹஸ்ரத் அனஸ் (ரழி) அவர்களைப் பார்த்து நபியவர்கள் கூறினார்கள். 'மகனே! உன் குடும்பத்தாரிடம் நீ சென்றால் ஸலாம் கூறு. அது உனக்கும் உன் குடும்பத்தினருக்கும் (பரகத்தாக) அபிவிருத்தியாக அமையும்'. (திர்மிதி)

சபைகளுக்குச் செல்லும் போதும் அதிலிருந்து விடை பெற்றுச் செல்லும் போதும் அனுமதி பெறும் வகையில் ஸலாம் கூற வேண்டும்.

'உங்களில் ஒருவர் சபைக்கு வருவாரானால் அவர் ஸலாம் கூறட்டும். அங்கிருந்து புறப்பட விரும்பினாலும் ஸலாம் கூறட்டும்' (அபூதாவூத்)

இவ்வாறு அனுமதிபெற்று உட்பிரவேசிக்கும் பண்பாட்டை பேணி நடப்போம்.

### பயிற்சி

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

1. பிறரது இடங்களுக்குள் செல்வதற்கு அனுமதி பெறுவது அவசியமாகும். ( )
2. அழைப்பு மணியை அழுத்தியும் அனுமதி கோரலாம். ( )
3. அழைப்பு மணி பொருத்தப்பட்டிருக்காத வீடுகளுக்கே ஸலாம் கூறவேண்டும். ( )
4. அனுமதி கேட்பது மூன்று தடவைகள் ஆகும். ( )
5. ஒரு சபைக்குச் செல்லும்போது ஸலாம் கூற வேண்டும். ( )
6. பிறர் வீட்டினுள் யன்னல் வழியாக உற்றுப் பார்க்கலாம். ( )
7. எமது வீடுகளுக்குள்ளும் ஸலாம் கூறிக் கொண்டுதான் செல்ல வேண்டும். ( )
8. பிறர் வீட்டில் நுழைந்தால் மாத்திரமே அனுமதி கேட்குமாறு அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ( )
9. பெற்றோரின் அறைகளுக்குள் அனுமதியின்றி நுழையலாம். ( )
10. இஸ்லாத்தில் அனுமதி கோரும் முறையைக் காட்டித் தராமையினால் நாம் விரும்பிய முறையில் அனுமதி கோரலாம். ( )